1994 மார்ச் 25]

200 கிலோ மீட்டருக்கு உள்ளடங்கி இருக்கிற காரணத்தால், சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போகிற பஸ்ஸை அந்தப் பக்கமாக விடுங்களேன். பாவம் அதைத் தான் கேட்கிறார்.

வினா எண். 86, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

86–

சிவகாசி தொகுதியில் கூட்டுறவு நூற்பு ஆலை அமைத்தல்.

** 22301* **திரு. ஜெ. பாலகங்காதரன்:**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதியில் கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்கப்படுமா?

(ஆ) இல்லை என்றால், தனியார் நிறுவனங்கள் நூற்பு ஆலை அமைக்க முன்வந்தால் அவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் சிவகாசி தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை,

(ஆ) தனியார் நிறுவனங்கள் புதிதாக நூற்பாலை அமைப்பதற்கு அரசு அளவில் நிதி உதவி எதுவும் அளிக்கப்படுவதில்லை.

முற்பகல் 10.25

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஒப்பற்ற தானைத் தலைவி, தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே இன்றைய தினம் தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை அளித்துக் கொண்டிருக்கிற வேளையில் சிவகாசியிலே தீப்பெட்டித் தொழிலை மட்டும் நம்பியிருக்கின்ற இன்றையதினம் இந்தத் தொழில் நசிந்து வருகின்ற காரணத்தினால் வேறு தொழிலுக்கு செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே டிரெளட் ஸ்கீமில் கரிசல் பூமியாக இருக்கின்ற காரணத்தினால் பருத்தி அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றது. அங்கேயிருக்கின்ற விவசாயிகள் அத்தனை பேரும்

மொத்தமாகச் சேர்ந்து தாங்களே ஒரு பங்கு அளித்து இந்த நூற்பாலைக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று முன்வருகிறார்கள். அவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு அரசு அந்தக் கூட்டுறவு நூற்பாலையை அங்கே அமைக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசிக்கு அருகாமையில் ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒரு நூற்பாலை 25000 கதிர்கள் கொண்டு செயல்பட்டு வருகிறது. அது கரிசல் காடாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே அதிகமாக பருத்தி உற்பத்தியாகின்ற காரணத்தினால் அந்தப் பருத்தியை ஸ்ரீவில்லிப்புத்தூர் நூற்பாலை பயன்பெறுகிற வகையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொண்டுவர ஏற்பாடு செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று இந்த அவைக்கு தெரிவித்து அமர்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தனியார் நிறுவனங்கள் நிறுவவேண்டுமென்றால், அது இண்டஸ்ட்ரியல் சோன் என்று அறிவிக்கப்பட்டு, அங்கே இண்டஸ்ட்ரியல் சப்சிடி கிடைக்காத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. அந்த இண்டஸ்ட்ரியல் ஜோன் என்ற அந்த நிலைமையை சிவகாசியில் நூற்பாலை அமைப்பதற்கு தனியார் முன்வந்தால் அந்த இண்டஸ்ட்ரியல் சப்சிடியை மட்டும் பெற்றுத்தர அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 87, திரு. இராம. இராமநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. கலியபெருமாள் கேட்கிறார். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

87 –

கும்பகோணம் பகுதிகளில் நெசவாளர்களுக்கு வீடுகட்டும் திட்டம்.

* 22414 **திரு. இராம. இராமநாதன்:**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம், பட்டீஸ்வரம், தாராசுரம், திருபுவனம் போன்ற பகுதிகளில் நெசவாளர்கட்கு வீடுகட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?